### அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:1-2

பின்னும் பெந்த்தேகோஸ்தே என்னும் நாட்கள் முடிவாகையில் அவர் கள் எல்லாரும் ஒரே இடத்தில் ஒருமித்திருந்தார்கள். ழூழூழூ 1. பெந்தேகோஸ்தே நாளென்பது இஸ்ராயேல் ஷஜனங்கள் எஷஜிப்துநாட்டை விட்டுப் புறப்பட்ட ஐம்பதாம் நாள். சீனாய்மலையில் சர்வேசுரன் மோயீசனுக்கு வேதகற்பனை கொடுத்த நாளாமே. அந்த நாளை யூதர்கள் முக்கியமான திருநாளாகக் கொண்டாடி வருவார்கள். இந்தத் திருநாளுக்குப் பற்பல தூர தேசங்களிலிருந்து யூதர்களும், வேதத்தை அநுசரிக்கும் புறஷஜாதியரும் திரளாய்க் கூடிவருவது வழக்கமாம். அப்பொழுது பலத்த காற்றடித்தாற்போல, திடீரென வானத்தினின்று ஓர் முழக்கமுண்டாகி, அவர்கள் உட் கார்ந்திருந்த வீடு முழுமையும் நிரப்பிற்று.

### அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:3-4

அல்லாமலும், அக்கினிமயம் போன்ற பிரிந்த நாவுகள் அவர்களுக்குத் தோன்றி, அவர்களில் ஒவ்வொருவர் மேலும் வந்து தங்கினது. அவர்கள் எல்லாரும் இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்பட்டு, பேசும் படிக்கு இஸ்பிரீத்துசாந்துவானவர் அவர் களுக்குக் கொடுத்த வரத்தின்படியே பற்பல பாஷைகளில் பேசத் தொடங்கி னார்கள். (மத். 3:11; அப். 11:16; 1 கொரி. 12:10; அரு. 7:39.)

### அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:8

ஆனால் உங்கள்மேல் எழுந்தருளி வரப்போகிற இஸ்பிரீத்துசாந்துவின் வல்லமையை நீங்கள் அடைந்து, ஷெஜருசலேமிலும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசி மட்டும் எனக்குச் சாட்சிகளாயிருப் பீர்கள் என்றார். (அப். 2:2; லூக். 24:48.)